பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 16 சனிக்கிழமை 31.12.2022 கதிர் 307

## பெண்ணின் சடலம் மீட்பு!

யாழ். வடமராட்சி – அல்வாய் பகுதியில் கிணற்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அல்வாய் -அம்பாள் கோயிலடியைச் சேர்ந்த 60 வயதுடைய மூதாட்டியே 2

# புதிய யாழ் மேயர் தேர்வு 2 வாரங்களில் நடக்கும்

### விரைவில் வர்த்தமானி அறிவித்தல் தேவையற்ற குழப்பங்கள் முடிவுக்கு

யாழ்ப்பாணம்,டிசம்பர் 31

யாழ். மாநகர சபை மேயர் வீ.மணிவண்ணன் இன்றைய தினத்துடன் தமது பதவியை ராஜினாமாச் செய்கின்றார் என அறிவித்துள்ள நிலையில், அடுத்த மேயர் தெரிவு குறித்து குழப்பமான தகவல்கள், செய்திகள் சில வட்டாரங்களினால் வெளியிடப்பட்டாலும் அவை உயர் மட்டத்தில் கலந்தாய்ந்து தீர்க்கப்பட்டு விட்டன என நம்பகரமாகத் தெரிய வந்தது. 2

## கோட்டாவைக் கவனிக்காமல் அநாதையாக விடக்கூடாதாம்

### ரணிலின் சகா கூறுகின்றார்

நாம் கோட்டாபய ராஜபக்ஷவைத் தனிமைப்படுத்தக் கூடாது. அவரை அரவணைக்க வேண்டும். அவரால்தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதிப் பதவி கிடைத்தது.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.



கோட்டாபய கடந்த திங்கட்கிழமை அமெரிக்கா 2

## திருடர்களையும் கொலைகாரர்களையும் விரட்டியடிக்க முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்!

### ஜே.வி.பி. வலியுறுத்து

திருடர்களையும் கொலைகாரர்களையும் சேர்த்துக் கொண்டு எப்படி நாட்டைக் கட்டியெழுப்புவது? இவர்களை விரட்டிவிட்டுத்தான் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எனவே, இவர்களை விரட்டியடிக்க முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்.

–இவ்வாறு ஜே.வி.பி.யின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

உண்மையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து இந்த அரசை விரட்ட வேண்டும் என்பது தான் நாட்டு மக்களின் தேவை. 2

## ஒரே இரவில் நால்வர் வெட்டிப் படுகொலை!



மொனராகலை மாவட்டத்தில் இருவேறு இடங்களில் நால்வர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நேற்றிரவு இடம்பெற்ற இந்தக் கொடூர சம்பவங்களில் மூன்று ஆண்களும், ஒரு பெண்ணும் உயிரிழந்துள் ளனர்.

பிபிலை நகரில் குடும்பப் பெண் ஒருவரும், இளைஞர் ஒருவரும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். உறவினர்களுக்கிடையிலா ன குடும்பத் தகராறே இந்தக் கொலைக்குக்காரணம்எனப்பொலிஸாரின் ஆரம்பகட்ட 2

## குட்டித் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஆதரவும் இல்லை; எதிர்ப்பும் இல்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு விருப்பத்தைத் தெரிவிக்கவும் இல்லை. எதிர்ப்பைத் தெரிவிக்கவும் இல்லை.

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

‘அரசு உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தாதா?’ என்று அவரிடம் வினவியபோது,

உண்மையில் தேர்தலை நடத்துவது அரசு அல்ல. தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுதான். அரசின் பொறுப்பு அதற்கான நிதியை வழங்குவதுதான்.



தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு விருப்பதைத் தெரிவிக்கவும் இல்லை. எதிர்ப்பைத் தெரிவிக்கவும் 2




## அரச ஊழியர்கள் 30 ஆயிரம் பேர் இன்றுடன் ஓய்வு

இலங்கை முழுவதும் சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசு உரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2

## நெற்றிக்கண்களுடன் பிறந்தது ஆட்டுக்குட்டி



யாழ்., புத்தூர் நிலா வரையில் விசித்திரமான கண்களுடன்ஆட்டுக்குட்டிஒன்றுபிறந்துள்ளது.

நிலாவரைப் பகுதியில் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயி ஒருவரின் ஆடே இவ்வாறு ஒரு குட்டி யைப் பிரசவித்துள்ளது.

அந்தக் குட்டியின் நெற்றிக்கு மேல், இரண்டு கண்களும் ஒன்றான நிலையில் காணப்படுகின்றன. இந்த அதிசய ஆட்டுக்குட்டியை அந்தப்பகுதியைச் சேர்ந்த பலரும்

ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்

## வத்திக்கானில் முன்னாள் பாப்பாண்டவர் 16 ஆம் பெனடிக்ட் இன்று காலமானார்!



முன்னாள் போப்பாண்டவர் பதினாறாம் பெனடிக்ட் உடல்நலக்குறைவு காரணமாக பதவி விலகி கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, தமது 95 வயதில் அவரது வாடிகன் இல்லத்தில் இன்று காலமானார்.

அவர் கத்தோலிக்க திருச்சபையை எட்டு ஆண்டுகளுக்கும் குறைவாக வழிநடத்தினார், 2013 இல், 1415 இல் கிரிகோரி யீணூணூ க்குப் பிறகு இராஜினாமா செய்த முதல் போப் ஆனார்.

பெனடிக்ட் தனது இறுதி ஆண்டுகளை வத்திக்கானின் சுவர்களுக்குள் உள்ள மேட்டர் எக்லேசியா மடாலயத்தில் கழித்தார். 2

## புதிய யாழ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளைக்கு பின்னர் இருவார காலத்துக்குள் புதிய மேயரைத் தெரிவு செய்வதற்கான மாநகர சபைக் கூட்டம் நடத்தப்படுவது குறித்து வர்த்தமானி அறிவித்தலும் விரைந்து வெளியிடப் படும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

முதல் முறை இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து இரண்டாவது மேயராக அல்லது தவிசாளராக தேர்ந்தெடுக்கப்படுபவர் தமது பதவியை எந்தச் சமயத்தில் ராஜினாமாச் செய்தாலும் அவருடன் சேர்ந்து அவரின் சபையும் கலையும் என்று புரியாத சட்டவியாக்கியானத்தை வைத்துக்கொண்டு சிலர் கிளப்பிய அநாவசிய சந்தேகங்களினாலேயே தற்போதைய குழப்ப நிலை ஏற்பட்டிருக்கின்றது என்றும் அறிய வந்தது.

மணிவண்ணனின் ராஜினாமாவினால் சபை கலைந்து விடவில்லை என்ற தெளிவான தீர்மானத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகார மட்டங்கள் வந்திருப்பதாகவும் அறியவந்தது.

யாழ் மாநகர சபையைப் பொறுத்தவரை தற்போதைய சபையின் முதல் மேயர் ஆர்னோல்ட் அவரது வரவு – செலவுத் திட்டம் இரண்டு முறை தோற்கடிக்கப்பட்டமையால் பதவியிழந்தார்.

அதையடுத்து அவர் அந்த இடத்துக்கு மணிவண்ணன் மேயராகத் தெரிவானார். அவர் மேயராகத் தெரிவாகிய கையோடு தமது மேயர் பதவியை துறக்கும் விதத்தில் ராஜினாமா செய்திருந்தால் மட்டுமே யாழ் மாநகர சபையும் அவரது பதவி துறப்போடு கலையும். அதுதொடர்பான சட்டவியாக்கியானத்தை அவர் பதவியேற்ற பின்னர், அவரது பதவிக்காலம் முழுவதுக்கும் அது பொருந்தும் என அவர் உட்பட சிலர் அர்த்தப்படுத்தியமையால்தான் தற்போதைய குழப்பம் ஏற்பட்டதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதுபோல கிண்ணியா பிரதேச சபையில் இரு தவிசாளர்கள், தலா இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமை காரணமாக பதவி இழந்த பின்னர், மூன்றாவது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் வரும் பத்தாம் திகதிக்குத் திகதியிடப்பட்டு, கடந்த 28ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் அத் தேர்வு பற்றிய அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. அந்த முன்மாதிரி யாழ் மாநகர சபைக்கும் அப்படியே பொருந்தும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## திருடர்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படிப் பார்க்கும்போது மக்களுக்குத் தேவை நாடாளுமன்றத் தேர்தல்தான். அதையே நாங்களும் கேட்கின்றோம்.

எதிர்க்கட்சியில் உள்ள சிலர் நாடாளுமன்றத் தேர்தலை விரும்பவில்லை. அரசில் இருந்து எதிர்க்கட்சி பக்கம் பாய்ந்து சுயாதீன எம்.பிக்கள் என்று கூறிக்கொண்டு இருப்பவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை விரும்பவில்லை. அவர்கள் தோல்வியடைந்துவிடுவார்கள் என அஞ்சுகின்றார்கள்.

ஜனாதிபதி நினைத்தால் அடுத்த வருடம் பெப்ரவரியின் பின் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம். ஆனால், அரசு இப்போதைக்கு எந்தத் தேர்தலுக்கும் செல்லாது – என்றார்.

## பெண்ணின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அம்பாள் வித்தியாலயத்துக்குப் பின்புறமாக உள்ள கிணற்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிணற்றில் குளிப்பதற்குச் சென் றவரே தவறி வீழ்ந்திருக்கலாம் என முதல்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த கிணறு அறுபது அடி ஆழம் கொண்டது. கிணற்றில் அமைக்கப்பட்ட கப்பிபாதுகாப்பற்ற முறையில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித் துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச ஊழியர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே தடவையில் இவ்வாறு பெருமளவிலான அரச ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதால், அரச சேவையில் எத்தகைய வீழ்ச்சியும் ஏற்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## குட்டித் தேர்தலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. நாட்டின் பொருளாதார நிலைமையை அரசு மக்களுக்கு விளக்கிக் கூறியுள்ளது.

மக்கள் எப்படிப்பட்ட பொருளாதாரச் சிக்கலில் உள்ளார்கள் என்பதை எல்லோரும் அறிவோம். இருந்தும், பணம் இல்லை, தேர்தலை நடத்தமாட்டோம் என்று அரசு சொல்லவில்லை. தேர்தலுக்காக அரசு ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கி வைத்துள்ளது – என்றார்.

## ஒரே இரவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை யில் தெரியவந்துள்ளது.

அதேவேளை, பதல்கும்புர நகரில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் குடும்பஸ்தர் ஒருவரும், இளைஞர் ஒருவரும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு இடங்களில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர்களையும் தேடி வருகின்றனர்.

## வத்திக்கானில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குப் பின் வந்த போப் பிரான்சிஸ், அவரை அடிக்கடி அங்கு சென்று பார்த்தார் எனஜ் கூறினார்.

இது குறித்து வத்திக்கான் வெளியிட்டுள்ள அறிக்கையில், போப் எமரிட்டஸ் 16ம் பெனடிக்ட் இன்று காலை 9.34 மணிக்கு வத்திக்கானில் உள்ள மேட்டர் எக்லேசியா மடாலயத்தில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்" – என்று கூறப்பட்டது.

## கோட்டாவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறப்பதற்கு முன்னர் வஜிர எம்.பி. இதனைத் தெரிவித்துள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

அரச எம்.பிக்களின் சந்திப்பு ஒன்று பத்திரமுல்லையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட இருவரது செயற்பாடுகள்தான் அங்கு வந்திருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

அவர்கள்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் எம்.பி. வஜிர அபேவர்த்தன. அவர்கள் என்ன அப்படிச் செய்தார்கள். அவர்கள் இருவரும் அனைவரிடமும் இருந்து சற்று ஒதுங்கிக்கொண்டார்கள்.

கோட்டாபயவின் காதுக்குள் வஜிர ஏதோ நீண்ட நேரமாக ஓதிக்கொண்டே இருந்தார். இருவரும் மிகவும் தீவிரமாக இரகசியம் பேசத் தொடங்கினார்கள்.

இதன்பின் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களின் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதில் வஜிர, கோட்டாபயவைப் பற்றி இப்படிப் பேசினார். நாம் கோட்டாபயவைத் தனிமைப்படுத்தக்கூடாது. அவரை அரவணைக்கவேண்டும். அவரால்தான் ரணிலுக்கு ஜனாதிபதிப் பதவி கிடைத்தது என்றார் வஜிர – என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யாழ் மாநகர சபைக் குழப்பம்

நாட்டின் சட்டம் என்பது அந்த நாட்டின் ஆள்களுக்கும், இடங்களுக்கும், காலத்துக்கும், நேரத்துக்கும் மாறுவதாக இருக்கக் கூடாது; இருக்க முடியாது. அது எல்லோருக்கும், எல்லா இடத்துக்கும் ஒன்றாகவும் ஒரே விதமாகவும் அர்த்தப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் தான் அது சட்டம்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களும் அப்படித் தான். அதிகாரிகள் மாறுவதினால் சட்ட வியாக்கியானம் ஆளாளுக்கு மாறுபடும் என்று அர்த்தம் செய்ய முடியாது; அர்த்தம் கொள்ளக் கூடாது.

யாழ் மேயர் மணிவண்ணன் இன்றுடன் தமது பதவியை ராஜினாமா செய்கின்றார் என்று அறிவித்துள்ளார். தாமாகவே தமது பதவியை துறந்த செம்மல் என்று அவருக்கு சிலர் புகழாரம் சூட்டுகின்றார்கள்.

அது தப்பு. யாழ் மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டத்தை இன்றுடன் முடிவடையும் ஆண்டுக்கு முதல் நிறைவேற்றுவதற்கான தனது அடிப்படை கடமையைக் கூட நிறைவேற்றாமல் சபையை நட்டாற்றில் விட்டு அவர் பதவி துறந்து செல்கிறார்.

சரியான உள்ளூராட்சி ஆணையாளர் ஒருவர் பதவியில் இருப்பாரானால் இந்தப் பெருந்தவறு குறித்து விசாரணைகளை ஊடுருவி நடத்தி, மேயராக இருந்த மணிவண்ணனின் யாழ் மாநகர சபைக்கான அடிப்படை உறுப்புரிமை பதவியில் கூட ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் கை வைத்திருக்க முடியும். இனியும் நடக்குமோ தெரியவில்லை.

மேயர் மணிவண்ணன் பதவி துறந்தமையால் மாநகர சபை கலையும் என்று ஒரு தவறான பிரசாரம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு முன்மாதிரியான சட்ட நடவடிக்கை உதாரணத்திற்கு உள்ளது. அதனை மீறி வடக்கில் உள்ள அதிகாரிகள் தம்பாட்டில் தீர்மானங்கள் எடுத்து, அரசியல் ரீதியாக அறிவிப்பது ஏற்புடையது அல்ல.

கிண்ணியா பிரதேச சபை இதற்கு நல்ல உதாரணம். அங்கு முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் தெரிவான கே.எம்.நிஹார் என்பவர் முதல் இரண்டு வருடங்கள் தவிசாளராக இருந்தார். பின்னர் அவரது வரவு – செலவுத் திட்டங்கள் இரண்டு முறைகள் அடுத்தடுத்து தோற்கடிக்கப்பட, அவர் பதவி இழந்தார்.

அடுத்து மு.கா. – அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றவற்றின் ஆதரவுடன் ஏ.எஸ். நிஸார் என்பவர் தவிசாளரானார். அவரின் வரவு – செலவு திட்டமும் இம்முறை இரண்டு அமர்வுகளிலும் தோற்கடிக்கப்பட அவரும் பதவி இழந்தார்.

ஆனால் அதற்காக சபை கலைந்ததாகக் கொள்ளப்படவில்லை. வரும் பத்தாம் தேதி மூன்றாவது தவிசாளரை தேர்வு செய்வதற்கான கூட்டத்தை கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அழைத்துள்ளார். இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வந்துவிட்டது.

எனவே, இந்த முன்மாதிரியை சட்ட வழியாகக் கொண்டு, யாழ். மாநகர சபையின் விடயத்திலும் நடவடிக்கை எடுப்பது, சட்டம் ஒரே விதமாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறையாக இருக்கும்.

# யாழ். மக்களுக்குச் சேவையாற்ற கிடைத்ததைமையை வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியமாக நினைக்கிறேன்!

## மகேசன் பெருமிதம்



யாழ் மாவட்ட மக்களுக்காக சேவையாற்ற கிடைத்தமையை என் வாழ்வில் நான் பெரும் பாக்கியமாகதான் நினைக்கின்றேன் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவரது பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

குறிப்பாக பல்வேறு பகுதிகளில் இருந்து மாற்றம் ஆகி வருகின்ற மாவட்ட செயலாளர்கள் யாவரும் தற்பெருமையோடும், தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டு வந்துள்ளனர்.

எனக்கும் இந்த மூன்றுவருடங்களும் சேவையாற்றக் கிடைத்தது பல எதிர்பார்ப்புகளையே தந்துள்ளது.

குறிப்பாக எமது பிரதேச செயலாளர்கள், பதவிநிலை அதிகாரிகள், இடர் அனர்த்த முகாமைத்துவம், கொரோனா தொற்று போன்ற காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் இடங்களுக்கு சென்று அதனை அவதானித்து அதற்கான பரிகாரங்கள், நிவாரணங்களை பெற்றுத்தந்தனர். அதற்கான நன்றிகளை தெரிவித்துகொள்வதுடன் ஏனைய உத்தியோகத்தர்களும் உறுதுணையை வழங்கியுள்ளனர்.

எனவே எதிர்வரும் காலத்திலும். இவ்வாறு பணிகளான சேவைக்கும், எனக்கு பணித்து இருக்கும் இளைஞர் விளையாட்டு திறன் அமைச்சுடைய செயலாளர் பதவிற்குப் பக்கபலாக இருந்து செயற்படுவேன். – என்றார்.



# கிளிநொச்சியில் கவனவீர்ப்பு!

கிளிநொச்சி – தொண்டமான் நகர் பகுதியில் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் இணைப்பு அலுவலகம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டதை கண்டித்து நேற்று (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சியில் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. வாயில் கறுப்பு பட்டிகளை அணிந்து கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

கடந்த 28 ஆம் திகதி பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் கிளிநொச்சி காரியாலயம் உடைத்து பொருள்கள், ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளன.

இதனைக் கண்டித்தும், களவில் ஈடுபடுபவர்கள் பாரபட்சம் இன்றி சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி, கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தின் முன்பாக கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் பொது அமைப்புகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வட மாகாண பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி ஹெட்டியாராச்சி கௌரவிப்பு!

பணி இடமாற்றம் பெற்றுச் செல்லும் வட மாகாண பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி டி.டி.டி.கே ஹெட்டியாராச்சியை கௌரவிக்கும் நிகழ்வு யாழ். கலட்டியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்று (வெள்ளிக்கிழமை) தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான கட்டுப்பாட்டு பிரதிநிதி கருணாகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பணியிடமாற்றம் பெற்றுச் செல்லும் பொலிஸ் விசேட அதிரடி அடிப்படையின் வட மாகாண கட்டளை அதிகாரி டிடிடிகே ஹெட்டியாராச்சி பொன்னாடை போர்த்து மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை இந்த நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜா, வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த மற்றும் மதத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படைத் தளபதி - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு இடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல்!



புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரெமித பண்டார தென்னகோன் ஆகியோருக்கிடையில் சினேகபூர்வ கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

கொழும்பில் உள்ள இராஜாங்க அமைச்சரது அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது வைஸ் அட்மிரல் பெரேரா கடற்படை தளபதி என்ற வகையில் அவர் மேற்கொள்ளும் அனைத்து எதிர்கால முயற்சிகளுக்கும் இராஜாங்க அமைச்சர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மேலும், இராஜாங்க அமைச்சர் மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற இந்த சந்திப்பை நினைவு கூறும் வகையில் நினைவுச் சின்னங்கன் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் ஹர்விதானாரச்சியும் கலந்துகொண்டார்.

வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா 25 ஆவது கடற்படைத் தளபதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் டிசெம்பர் 18 ஆம் திகதி நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கம்போடிய ஹோட்டலில் தீவிபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 26 ஆக உயர்வு

## காயமடைந்த 57 பேர் மருத்துவமனையில்!

நொம்பென்,டிச.31

கம்போடியாவில் நட்சத்திர ஹோட்டல் தீவிபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

கம்போடியா நாட்டில் தாய்லாந்து எல்லையில் கிராண்ட் டயமண்ட் சிட்டி கேசினோ என்ற நட்சத்திர ஹோட்டல் உள்ளது. இந்த ஹோட்டலில் ஏராளமான சுற்றுலா பயணிகள் தங்கி இருந்தனர். நேற்றிரவு 11.30 மணி அளவில் ஹோட்டலின் ஓர் அறையில் இருந்து கரும்புகை வந்தது. சிறிது நேரத்தில் அந்த அறை தீப்பிடித்து எரிந்தது. காற்று பலமாக வீசியதால் தீ மளமளவென பக்கத்து அறைகளுக்கும் பரவியது. தகவலறிந்து தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஹோட்டல் அறைக்குள் சிக்கிக்கொண்டவர்களை மீட்கும் பணியிலும் ஈடுபட்டனர். இதில் 10 பேர் பலியாகினர் எனவும், முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர் எனவும் முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், ஹோட்டலில் பரவிய தீ முற்றிலும் அணைக்கப்பட்டது என்றும், மீட்பு பணிகளும் முடிந்தன என்றும் அதிகாரிகள் கூறினர். இந்த தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது.

57 பேர் காயமடைந்து அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர்கள் தெரிவித்தனர். ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# துருக்கியில் ஹோட்டலில் நடந்த சிலிண்டர் வெடிப்பில் 7 பேர் பலி!

இஸ்தான்புல்,டிச.31

துருக்கியில் ஹோட்டலில் சிலிண்டர் வெடித்த சம்பவத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

துருக்கியில் ஐடின் மாகாணம் நசிலி மாவட்டத்தில் உள்ள ஹோட்டலில் நேற்று மாலை 3.30 மணியளவில் ஊழியர்கள் வழக்கமான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, ஹோட்டலில் உள்ள சிலிண்டரை மாற்ற ஊழியர்கள் முயற்சித்தனர். அப்போது எதிர்பாராத விதமாக சிலிண்டர் வெடித்துச் சிதறியது. இந்தக் கோர விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக அவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# மேலும் ஏழு ஆண்டுகளுக்கு ஆங் சான் சூகிக்குச் சிறை!

## மொத்தம் 33 ஆண்டுகள்



யாங்கூன்,டிச.31

மியான்மர் நாட்டில் ஆட்சியை கடந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் கைப்பற்றியது. மேலும், அந்நாட்டின் முன்னாள் தலைவர் ஆங் சான் சூகி (வயது 77) உள்ளிட்ட முக்கிய தலைவர்களை கைது செய்து சிறை வைத்தது.

இராணுவத்திற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபடுதல், ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக ஆங் சாங் சூகிக்கு ஏற்கனவே 26 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மற்றொரு ஊழல் வழக்கில் ஆங் சாங் சூகிக்கு மேலும் 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து இராணுவ நீதிமன்றுக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் ஆங் சாங் சூகிக்கு விதிக்கப்பட்ட சிறைதண்டனை மொத்த ஆண்டு எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.

# சீனப் பயணிகளுக்கு கட்டாயமாக கொரோனாத் தொற்றுச் சோதனை

## பிரான்ஸ், ஸ்பெயின் அறிவிப்பு



ஸ்பெயின்,டிச.31

பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளும் சீன பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனையை நடத்த உத்தரவிட்டுள்ளன.

உருமாறிய புதிய வகை கொரோனாவான பி.எவ்.-7 சீனாவில் மிக வேகமாக பரவி வருவதால் உலக நாடுகள் அச்சமடைந்துள்ளன.

இதையடுத்து இந்தியா, இத்தாலி, தென்கொரியா, மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் சீனாவில் இருந்து வரும் விமான பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளும் சீன பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனையை நடத்த உத்தரவிட்டுள்ளன.

சீனாவிற்கு செல்வதை தவிர்க்குமாறு பிரெஞ்சு மக்களை பிரான்ஸ் அரசு வலியுறுத்தி உள்ளது. சீனாவிலிருந்து பிரான்ஸ் செல்லும் விமானங்களில் பயணிப்போர் முக கவசம் அணிவது மீண்டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. புதிய கொரோனா வைரஸ் மாறுபாடுகளை அடையாளம் காண சீனப் பயணிகளுக்கு விமான நிலையங்களில் பி.சி.ஆர். சோதனை நடத்தப்படுவதாக பிரான்ஸ் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, ஸ்பெயின் அரசும் சீனாவிலிருந்து வரும் அனைத்து விமானப் பயணிகளுக்கும் கொரோனா பரிசோதனை மற்றும் தடுப்பூசி சான்றிதழ்களை கட்டாயமாக்கி உள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு சுகாதார அமைச்சர் கரோலினா டேரியாஸ், சீனா வில் கொரோனாவால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து ஐரோப்பிய நாடுகளிலும் இதேபோன்ற தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க ஸ்பெயின் அழுத்தம் கொடுக்கும் என்றார்.

# உக்ரைனின் ஏவுகணையை சுட்டு வீழ்த்தியது பெலாரஸ்

உக்ரைன் எல்லையில் இருந்து தொலைவில் அமைந்துள்ள பெலாரஸ் நாட்டின் ஹர்ப்சா நகர வான்பரப்புக்குள் நுழைந்த அந்த ஏவுகணையை பெலாரஸ் ராணுவம் சுட்டு வீழ்த்தியது.

உக்ரைன் மீது 10 மாதங்களாக போர் தொடுத்து வரும் ரஷ்யா சமீபகாலமாக உக்ரைனில் ஏவுகணை தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகிறது. அந்த வகையில் முன்தினம் தலைநகர் கீவ் உள்பட உக்ரைனின் பல்வேறு நகரங்கள் மீது ரஷ்யப் படைகள் ஏவுகணைகளை மழையாகப் பொழிந்தன. அப்போது உக்ரைனின் வான்பாதுகாப்பு படை ரஷ்ய ஏவிய பல ஏவுகணைகளை நடுவழியில் இடைமறித்து அழித்தன. அப்படி ரஷ்ய ஏவுகணையை அழிப்பதற்காக வீசப்பட்ட எஸ் 300 வான்பாதுகாப்பு ஏவுகணை ஒன்று, எல்லை தாண்டி அண்டை





நாடான பெலாரஸுக்குள் நுழைந்தது. உக்ரைன் எல்லையில் இருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பெலாரஸ் நாட்டின் ஹர்ப்சா நகர வான்பரப்புக்குள் நுழைந்த அந்த ஏவுகணையை பெலாரஸ் இராணுவம் சுட்டு வீழ்த்தியது. அதை தொடர்ந்து ஏவுகணையின் சிதைவுகள் அங்குள்ள வயல்வெளியில் விழுந்தன. அப்போது அந்த பகுதியில் பயங்கர அதிர்வுகள் ஏற்பட்டன என உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். தங்கள் நாட்டுக்குள் உக்ரைன் ஏவுகணையை வீசியதற்கு கடும் கண்டனம் தெரிவித்த பெலாரஸ் அரசு இது தொடர்பாக உக்ரைன் தூதரை நேரில் அழைத்து சம்மன் வழங்கியது. மேலும் இதுப்பற்றி உக்ரைன் அரசு விரிவான விசாரணை நடத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டது. உக்ரைன் போரில் பெலாரஸ் ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# பயங்கரவாதம் மூலமாக இந்தியாவை பேச்சுக்குக் கட்டாயப்படுத்த முடியாது

## வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டம்

நிகோசியா,டிச.31

அனைவருடனும் சுமூகமான உறவையே இந்தியா விரும்புகிறது என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சைப்ரஸ் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிகோசியா நகரில் அங்கு வசிக்கும் இந்தியர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது, ஜெய்சங்கர் பேசியதாவது: –

பயங்கரவாதத்தின் மூலமாக யாரும் இந்தியாவை பேச்சுவார்த்தைக்கு கட்டாயப்படுத்த முடியாது. அதனை நாம் ஏற்று கொள்ளவும் மாட்டோம். இந்தியா அனைவருடனும் சுமூகமான உறவை பேணுவதற்கே விரும்புகிறது. சுமூகமான உறவு என்பதற்காக மன்னித்து கொண்டே இருப்பது அல்லது விலகி நின்று பயங்கரவாதத்தை வேடிக்கை பார்ப்பது என்று அர்த்தம் கிடையாது. இதில் இந்தியா தெளிவாக உள்ளது.

கொவிட் காலத்தில் எல்லைப் பிரச்னைகள் கொஞ்சம் அதிகரித்தது. எல்லை விவகாரத்தில் இந்தியா – சீனா உறவு சுமூகமாக இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். தன்னிச்சையாக எல்லை கட்டுப்பாடு கோட்டை மாற்றி அமைப்பதற்கு இந்தியா உடன்படவில்லை என்பதால், அதில் சிக்கல் உருவாகி இருக்கிறது.

வெளியுறவு கொள்கை, தேசபாதுகாப்பு ஆகியவை குறித்து யோசிக்கும் போது, அரசின் ராஜதந்திரம், வெளியுறவு கொள்கைகள் பற்றி சில விஷயங்களை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். சமாதானத்தை விரும்பும் நாடாக இந்தியாவிற்கு பல எதிர்பார்ப்புகள் உள்ளன. தற்போது சுதந்திரமான பொருளாதார பலம் மிக்க நாடாக இந்தியா பார்க்கப்படுகிறது. – இவ்வாறு ஜெய்சங்கர் பேசினார்.




## மோடி தாயார் மறைவு; ஜோ பைடன் இரங்கல்



வொஷிங்டன்,டிச01

பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென்னின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் டுவிட்டர் வழியே தனது இரங்கலை தெரிவித்து உள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் –

பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் மோடி மறைவுக்கு ஜில்லும், நானும் ஆழ்ந்த மற்றும் உள்ளார்ந்த உணர்வு சார்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறோம். இந்த கடினம் வாய்ந்த சூழலில் பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினருக்காக நாங்கள் பிரார்த்தனை செய்து கொள்கிறோம். – என அவர் தெரிவித்து உள்ளார்.

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் உள்ள மருத்துவமனையில் நேற்று அதிகாலை வயது மூப்பு காரணமாக ஹீராபென் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 99 ஆகும். அவரது மறைவு செய்தி கேட்டதும் உடனடியாக குஜராத் சென்ற பிரதமர் மோடி, தனது தாயார் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதன்பின்னர் இறுதிச்சடங்கு நிகழ்வுகள் நடைபெற்றன. இதனையடுத்து காந்திநகரில் உள்ள மயானத்தில் பிரதமர் மோடியின் தாயார் உடல் தகனம் செய்யப்பட்டது.

## சொகுசு பஸ் – கார் மோதல் குஜராத்தில் 9 பேர் மரணம்!

புதுடெல்லி,டிச.31

குஜராத்தின் நவ்சாரி பகுதியில் அகமதாபாத் – மும்பை நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த சொகுசு பஸ் மற்றும் கார் திடீரென நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். இந்த நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கும் காயமடைந்தவர்களுக்கும் நிவாரணம் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிடப்பட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:–



நவ்சாரியில் சாலை விபத்தில் உயிர்களை இழந்தது வேதனை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுடன் என் எண்ணங்கள் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைவார்கள் என நம்புகிறேன். உதவித் தொகையாக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ரூ.2 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 11 வயதுச் சிறுமி வயிற்றில் அரைக் கிலோ தலைமுடி!

### அறுவை சிகிச்சை மூலம் அகற்றல்

மைசூரு, டிச.31

கர்நாடகாவின் மைசூரு நகரில் 11 வயது சிறுமிக்கு அடிக்கடி வயிறு வலிக்கிறது என கூறி வந்துள்ள நிலையில், பெற்றோர் ஒவ்வொரு மருத்துவமனையாக கொண்டு சென்று காண்பித்துள்ளனர்.

ஆனால், பல்வேறு மருத்துவம் பார்த்தும் வலி குறையவில்லை. கடந்த 8 மாதங்களாக பாதிப்பு அதிகரித்து கொண்டே சென்றுள்ளது. வலிக்கான காரணம் என்னவென கண்டறிய முடியவில்லை. இதனால், பள்ளி படிப்பையும் இடையிலேயே சிறுமி நிறுத்தி விட்டார்.

இதனைத் தொடர்ந்து, இரைப்பை சிகிச்சை நிபுணரிடம் சென்றபோது, அவர் முழு அளவில் எண்டோஸ்கோபி செய்து பார்த்துள்ளார்.

அதில், சிறுமி வயிற்றில் பெரிய பந்து வடிவில் முடி இருந்துள்ளது தெரிய வந்துள்ளது. சாப்பிடும் உணவும், முடியும் கலந்து ஒருவித தோற்றத்துடன் காணப்பட்டு உள்ளது. மிக பெரிய அளவில் முடி நீண்டு இருந்துள்ளது.

இதனால், எண்டோஸ்கோபி வழியே அதனை வெளியேற்ற முடியவில்லை. இதன்பின், சிறுமிக்கு லேபரோஸ்கோபி அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. இதில், அரை கிலோ (500 கிராம்) எடை கொண்ட முடி நீக்கப்பட்டது. வலி குணமடைந்து, சிறுமி உடல்நலம் தேறி வருகிறார்.

சிறுமியிடம் நடந்த கவுன்சிலிங்கில், மனஅழுத்தம் அதிகரிக்கும்போது, தலைமுடியை பிய்த்து அதனை உண்ணும் வழக்கத்தை அவர் கொண்டிருந்துள்ளார் என தெரிய வந்துள்ளது. இதனை சிறுமியின் குடும்பத்தினர் கவனித்த போதும், 2 ஆண்டுகளாக அலட்சியமுடன் இருந்துள்ளனர். இதுவே சிறுமியை, மருத்துவ சிக்கலான சூழலில் கொண்டு போய் விட்டு உள்ளது. இதனால், சிறுவர், சிறுமிகள் இடையே அமைதியான உளவியல் சார்ந்த பிரச்சனைகள் காணப்படுவதும், அது வேறு வகையான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளதும் தெரிய வந்துள்ளது.



## வீட்டில் பதுக்கிய பட்டாசுகள் வெடித்ததில் நாமக்கலில் நால்வர் பலி; ஐவர் படு காயம்!

நாமக்கல் மாவட்டம் மோகனூர் மேட்டுத்தெருவில் வசித்து வருபவர் தில்லைக் குமார், இவர் தில்லை பயர் ஒர்க்ஸ் நடத்தி வருகிறார்.


இவரது வீட்டில் பட்டாசுகளை பதுக்கி வைத்திருந்தார் எனக் கூறப்படுகிறது. இந்த பட்டாசுகள்,வெடிகள் இன்று அதிகாலை 3 மணிக்கு திடீரென வெடித்துச் சிதறியுள்ளன.


இந்த வெடி விபத்தில் வீடு முழுவதும் தரை மட்டமாகி உள்ளது. அந்த வீட்டிற்கு அருகே வசித்து வந்த மூதாட்டி பெரியக்காள் (73) உட்பட 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரையும் மீட்ட அக்கம்பக்கத்தினர் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

இடத்திற்கு தீயணைப்பு துறை யினர் விரைந்துள்ளனர்.

நாமக்கல் டி.எஸ்.பி சுரேஷ், மோகனூர் வட்டாச்சியர் ஜானகி, மோகனூர் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தென்கிழக்கு – ரஷ்யா பல்கலைக்கழகங்கள் கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த உடன்படிக்கை











(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக ரஷ்யாவின் UI. Y. Yakovlev Chuvash State Pedagogical பல்கலைக்கழகத்துக்கும் தென்கிழக்கு பல்கலைக் கழகத்துக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்று இணைய வழி ஊடாக இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கைக்கான முன்னெடுப்புக்களையும் தலைமைத்துவத்தையும் ரஷ்யாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பேராசிரியர் ஜனித்த ஏ லியனகே தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

இணையவழியில் இந்த உடன்படிக்கையின் போது, ரஷ்யாவின் பல்கலைக்கழகத்தின் சார்பில் கல்வி விவகாரங்களுக்கான துணைப்பொறுப்பாளர் பேராசிரியர் இவனொவ் விளாடிமிர் நிகோலாவிக், தாளாளர் லீனா ஸ்வெட்லானா விக்டோரோவினா, அறிவியல் மற்றும் நவீன பணித்துறையின் தலைவர் கிரிலோப் அலக்ஸ்சான்டர் அலெக்சிவிக், ஆகியோரும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாட் ரூளி , பதிவாளர் மற்றும் பீடாதிபதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வமைப்புடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது ஆசிரிய – மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள், ஆசியர் மற்றும் மாணவர் பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றிணைந்த வேலைத் திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இதுபோன்ற புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேலும் விரிவுபடுத்து வதற்கு பல்கலைக்கழக சர்வதேச விவகா ரங்களுக்கான அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி ரஷ்யா, துருக்கி, மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் எதிர்வரும் காலங்களில் மேலும் பல புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது, பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் மூன்றாவது ஒப்பந்தம் ஆகும். அண்மைக் கால மாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உயர் கல்வியினை சர்வதேச மயப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், பல்கலைக் கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. றியாட் ரூளி இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழு

## மருதமுனையில் ஸ்தாபிக்கப்பட்டது



(நூருல் ஹுதா உமர்)

இனங்களுக்கிடையில் நல்லுறவை கட்டியெழுப்பி இளம் சந்ததியை ஆற்றலும், நல்லொழுக்கமுமிக்க சந்ததியாக உருவாக்கும் நோக்கில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அனுசரணை வலையமைப்பு நிறுவனமான இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழு அங்குரார்ப்பண வைபவமும் நிர்வாகத்தெரிவும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல்.ஹபீலாவின் ஒருங்கமைப்பில் மருதமுனை பெண்கள் நிலையத்தில் இடம்பெற்றது.

இனங்களுக்கிடையிலான உறவுகளின் முக்கியத்துவம், நாட்டை கட்டியெழுப்ப இனங்களுக்கிடையிலான ஒற்றுமை ஏன் அவசியப்படுகின்றது, இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழுவின் தேவைகள், வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு தாளங்குடா தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எம்.எஸ்.ஏ. அன்ஸார் மௌலானாவின் தலைமையில் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. புதிய நிர்வாக சபையின் செயலாளராக கல்முனை அஸ்ஸுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ஆர்.மஜீதியாவும், பொருளாளராக ஸ்ரீலங்கா டெலிகொம் உத்தியோகத்தர் எஸ். துவாரகாவும், வெளியீடுகளுக்கான இணைப்பாளராக கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவை பணிப்பாளர் யூ.எல்.என். ஹுதாவும், செயற்குழு உறுப்பினர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளரும், அட்டாளைசேனை சமுர்த்தி உதவி முகாமையாளருமான எஸ்.எல். அப்துல் அஸீஸ், கல்முனை வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்திரன, ஆசிரியர்களான வீ. தையூப், எம். விஜிலி மூஸா, திருமதி ஜன்னா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழு எதிர்வரும் காலங்களில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உருவாக்குவது, சமாதான இலங்கையை கட்டியெழுப்புவது, தலைமைத்துவ பண்புகள் நிறைந்த இளம் தலைமுறையை உருவாக்குவது போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்ல உள்ளது குறிப்பிடத்தக்கது.




# அறுவடையாகும் நெல்லை கொள்வனவு செய்யுங்கள்!

## கிண்ணியா விவசாயிகள் கோரிக்கை

(ஹஸ்பர்)

அறுவடை செய்யப்பட இருக்கின்ற பெரும் போகத்திற்கான நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிண்ணியா விவசாய சம்மேளனங்களின் ஊடகப் பேச்சாளர் எம். எம். மஹ்றி கோரிக்கை விடுத்துள்ளார். கிண்ணியாவில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில. –

உர இறக்குமதி நிறுத்தப்பட்டமையாலும் நெற்செய்கைக்கான மூலப் பொருள்களின் விலை உயர்வினாலும் கடந்த காலங்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வருமான இழப்பு, கடன் போன்றவற்றால் தத்தளிக்கின்றனர். கடந்த பல வருடங்களாக அறுவடை செய்யப்படும் நெல்லை அரச நெற்களஞ்சிய சாலை கொள்வனவு செய்யாமையினால், உத்தரவாத விலையை பேண முடியாமல் குறைந்த விலையில் தனியாருக்கு விற்கவேண்டிய நிர்பந்தத்தின் மூலம் விவசாயிகள் மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர். எனவே இன்னும் சில நாள்களில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பெரும் போக நெற் செய்கையின் மூலம் அறுவடை செய்யப்படு கின்ற நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் சார்பாக அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். – என்றார்

# ராஜபக்ஷக்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது!



## அடித்துக் கூறுகின்றார் மைத்திரி

நாட்டை படுவீழ்ச்சியடையச் செய்த ராஜபக்சக்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோட்டாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோர் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்திருந்தால் இந்த நாடு மோசமான நிலைக்குச் சென்றிருக்காது.

ராஜபக்ஷக்கள் தங்கள் குடும்ப ஆட்சியில் மாத்திரம் கவனம் செலுத்தியதன் விளைவாகவே இந்த நாடு படுமோசமாக வீழ்ச்சியடைந்தது. இறுதியில் ராஜபக்சக்களும் ஆட்சிப்பீடத்திலிருந்து மக்களின் எழுச்சியால் தூக்கி வீசப்பட்டார்கள்.

நாட்டைப் படுவீழ்ச்சியடையச் செய்த ராஜபக்சக்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. ராஜபக்சக்களின் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் எமது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனிமேல் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூட்டணி அமைக்காது – என்றார்.

# மருத்துவ உதவு தொகை, நோய்களின் பட்டியலைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை

ஜனாதிபதி நிதியத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 11,000 விண்ணப்பங்களுள் 10,360 விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என அதன் செயலாளர் டபிள்யூ.ஏ. சரத்குமார தெரிவித்தார்.

அநேகமான விண்ணப்பங்களுடன் தொடர்புபட்ட கொடுப்பனவுகள் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளையும் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் செலுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் சரத் குமார மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இவ்வருடத்தில் மருத்துவ உதவிக்காக சுமார் 1500 மில்லியன் ரூபா தற்போது வரை செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2022-08-01ஆம் திகதி வரை ஜனாதிபதி நிதியத்தில் குவிந்து கிடந்த 8,210 விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து அதற்கான பணிகளை நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் ஜனாதிபதி நிதியத்தின் புதிய செயலாளர் டபிள்யூ.ஏ. சரத்குமாரவிற்கு வழங்கிய பணிப்புரைக்கமைய அதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய இதுவரை 10,360 விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எனினும், வருட இறுதியில் கிடைக்கப்பெற்ற மற்றும் பல்வேறு காரணங்களால் பணிகளை பூர்த்திச் செய்ய முடியாமல் போன 642 விண்ணப்பங்களுக்கு அவசிய மானநிதியைதிரட்டும்பணிகள்தற்போதுமுன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் எதிர்வரும் சில வாரங்களில் அந்தப் பணிகளைப் பூர்த்திச் செய்ய முடியுமென்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஆதரவற்ற நோயாளர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்குவதைத் துரிதப்படுத்துமாறும் குவிந்துள்ள விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், 2023 ஜனவரி மாதம் முதல் அதற்கான பணி களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக கூறினார்.

அதற்கமைய, மருத்துவ உதவிகளுக்கான விண்ணப்பங்களுக்கு மிக குறுகிய காலத்துக்குள் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொலைவிலுள்ள நோயாளிகள் மருத்துவ உதவித் தொகையைப் பெறுவதற்காக நகரங்களுக்கு வருவதை குறைப்பதற்காகஜனாதிபதிநிதியத்தில்பதிவுசெய்யப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக, புதிய வைத்தியசாலைகளைப்பதிவுசெய்யநடவடிக்கைஎடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்காகத் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரைக் கமைய மருத்துவ உதவித் தொகையை உடனடியாக அதிகரிக்குமாறு ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில், மருத்துவ உதவிக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்.

அத்துடன் உதவி வழங்குவதற்கான மருத்துவப் பட்டியலை புதுப்பிக்கும் வகையில் தற்போது உதவி வழங்கப்படும் நோய்களுக்கு மேலதிகமாக மேலும் சில நோய்களை பரிந்துரைக்குமாறும் மேற்படி குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதியச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கமைய அறக் கட்டளை மற்றும் மத நடவடிக்கைகளுக்காக 2 கோடி ரூபாவும் ஜனாதிபதி நிதியத்துக்கு கிடைக்கும் நிதியிலிருந்து 130 கோடி ரூபா மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளாதார நெருக்கடிக்குள்ளான 3000 மாணவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு தகுதியுடைய மாணவர்களை தேர்ந்தெடுக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி நிறைவடைந்துள்ளது.

மருத்துவ உதவி பெறுவதற்காக ஜனாதிபதி நிதியத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து மற்றும் ஏனைய பொருளாதாரச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பணம் செலுத்தப்படும் வரை ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்குமாக 06 தடவைகளுக்கு குறுந்தகவல்கள் அனுப்பப்படும்.

இந்நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டு முதல் (இன்று) மேலும் சிறந்த முறையில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# யாழ். மாவட்ட அரச அதிபருக்கு நேற்று மகத்தான பிரியாவிடை!







யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

கணபதிப்பிள்ளை மகேசன், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள மட்டக்களப்பு மாவட்ட செயலாளராகவும், வெளிநாட்டு விவகார அமைச்சின் திணைக்கள பணிப்பாளராகவும் கடமையாற்றி தற்போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன் (காணி) மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் நீக்ளஸ்ப்பிள்ளை, விவசாயப் பணிப்பாளர் வாசுகி கமலேஸ்வரன், சமுர்த்திப்பணிப்பாளர் திவாகரன் உள்ளிட்ட பதவிநிலை உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக அலுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சர்வகட்சி மாநாடு ரணிலின் நாடகம்

## இரு மாதங்களுக்குள் அரசியல் தீர்வை வழங்க முடியுமா என ஜே.வி.பி. கேள்வி



இரண்டு மாதங்களுக்குள் அரசியல் தீர்வை வழங்க முடி யுமா? இது ரணிலின் நாடகம் என்று எங்களுக்குத் தெரியும். அதனால்தான் ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டை நாங்கள் புறக் கணித்தோம்.

– இவ்வாறு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடா ளுமன்ற உறுப்பி னருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

'அரசியல் தீர்வை வழங்குவதற்காக ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?' என்று தெற்கு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்டகாலப் பிரச்சினையை இரண்டு மாதங்களுக்குள் தீர்க்க முடி யுமா? இது பொய் என்று விளங்கவில்லையா? இது சர்வதேசத்தை ஏமாற்றும் செயல்.

உண்மையில் அரசியல் தீர்வை முன்வைப்பதென்றால் புதிய அரச மைப்பு கொண்டு வரப்பட வேண்டும். அதனூடாகத்தான் தீர்க்க முடியும்.

உண்மையில் இதைச் செய்வ தற்கான வாய்ப்பு 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ரணிலுக்கு இருந்தது. மூன்றில் இரண்டு பெரும் பான்மையும் நாடாளுமன்றில் இருந் தது. அப்போது செய்யாமல் இப்போது இரண்டு மாதங்களுக்குள் செய்யப் போகின்றேன் என்பதை நம்ப முடியுமா?

அடுத்த சர்வகட்சிக் கூட்டம் இருப்பது ஜனவரி நடுப்பகுதியில். அது முடிந்து பெப்ரவரி நடுப்பகுதியில் எப்படித் தீர்வை வழங்குவது? – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

# 2023 இலிருந்து தனியார் நிறுவன ஊழியர்களின் நாளேட்டில் ஈ.பி.எவ், ஈ.ரி.எவ். இலக்கம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்!

## வடமாகாண தனியார் ஊழியர் சங்கத் தலைவர் சிவகுமார் கோரிக்கை

2023 ஆம் ஆண்டில் இருந்து தனியார் நிறுவன ஊழியர்களின் நாளேடு காட்சிப்படுத்துவதுடன் அதில் ஈ.பி.எவ், ஈ.ரி.எவ். இலக்கம் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என வடமாகாண தனியார் ஊழியர் சங்கத்தின் தலைவர் சாமிநாதன் சிவகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அடிப்படை சம்பளம் 17 ஆயிரம் ரூபாவாக இருக்கின்ற போதிலும், பல இடங்களில் அதனையும் விடக் குறைவான சம்பளம் வழங்கப்படுவ தாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், குறிப்பாக புடைவைக் கடைகளில் வேலை செய்யும் பெண் பிள்ளைகளுக்கு 8 ஆயிரம் சம்பளம் வழங்கப்படுவதாக வும் இவ்வாறான செயற்பாடுகளை நிறு வனங்கள் தவிர்க்க வேண்டும் இல் லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கப டும் என எச்சரித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2022 இல் வெளியிடப்பெற்றது.